# கம்புறுப்பிடிய பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்புறுப்பிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீதிமன்றத் தண்டப் பணம் கடன்பட்டோருக்காக 2012 ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 157,710 தொகை காசேடு வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் நாட்குறிப்பு இலக்கம் 33 இன் மூலம் அத் தொகை கடன்பட்டோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் இத்தொகை அக் கணக்குகளுக்கிடையில் இரட்டைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக 2013 திசெம்பர் 06 திகதிய 8854 இலக்க பற்றுச் சீட்டின் மூலம் 2013 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 144,709 தொகை கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்வேறு கடன்பட்டோர் தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி அதே தொகையால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) கட்டிட நிர்மாணங்கள், காணிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் நீர்ச் செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 3,114,034 இற்கான மூலதன செலவுகள் காரணமாக சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களின் அபிவிருத்தி ஒன்று ஏற்பட்டிருந்த போதும் அச் செலவுகளை நிலையான சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைத்து மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானத்தின் பங்களிப்பு கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,463,200 பெறுமதியான நான்கு சில்லுகளுடனான டிரக்டர் வண்டி மற்றும் டெய்லர் 2013 ஜூன் 06 திகதி சபைக்கு கிடைத்திருந்த போதும் அப் பெறுமதியினை மோட்டார் வாகனம் மற்றும் மாட்டு வண்டி கணக்கிற்கு வரவு வைத்து மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானத்தின் பங்களிப்பு கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 64,900 இற்கான மூலதன செலவுகள் வருமானச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது 2012 ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 810,332 தொகையான முத்திரைக கட்டண வருமானப் பெறுவனவுகள் குறிப்பிட்ட கணக்குகளிடையே சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சபைக்குச் சொந்தமான கப் வண்டிக்கான கிடைத்திருந்த காப்புறுதிக் கட்டணம் ரூபா 66,231 இனை திருத்தச் செலவுகளில் இருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தமையால் செலவுகள் அதே தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது 2012 ஆண்டிற்கான வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 44,064 தொகை கடன்பட்டோர் கணக்கு செலவு வைக்கப்படாமல் வழங்களின் உபகரண செலவுத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன்

காரணமாக அதே தொகையால் கடன்பட்டோர் கணக்கு மிகையாகவும் செலவுக் கணக்குகள் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,061,933 ஆக காணப்பட்டதுடன், துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,042,301 ஆக காட்டப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,980,368 ஆக காணப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்கு

---

முன்னைய ஆண்டின் இருந்து முன்கொண்டு வரப்பட்ட நிலையில் காணப்படும் ரூபா 1,168,845 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,325,332 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,002,220 ஆகும்.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 41,531,049 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வற்காக தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2005 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாகச் செயலாளரின் சுற்று நிருபம் | ஆதனக் கடன் தொடர்பாக திருத்தப்பட்ட சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக்கடன் தொடர்பாக வங்கி வட்டி வீதம் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 வட்டி வீதத்திற்கு இடையிலான வித்தியாசத்தை அரசாங்கம் மீளளிப்புச் செய்ய வேண்டும். அவ்வாறாயினும் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்படாத தொகை ரூபா 384,000 ஆகும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,416,946 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,564,000 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---------------------------------

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி மற்றும் ஏக்கர் வரி | 336 | 365 | 1,014 |
| வாடகை | 5,113 | 5,438 | 2,370 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,257 | 1,611 | 84 |
| ஏனைய வருமானங்கள் மற்றும் உதவிகள் | 27,606 | 28,076 | 14,826 |

2.3 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------------

(அ) வீத வரி

-----------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 857,373 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் இருந்து ரூபா 169,330 மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தமையால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 19 அளவிலான சிறிய பெறுமதியே காணப்பட்டது.

(ஆ) நீர்க் கட்டணம்

--------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 1,269,077 ஆக காணப்பட்டதுடன் பில்போடப்பட்ட தொகை ரூபா 1,297,201 ஆகும். மீளாய்வாண்டின் போது நிலுவை தொகையில் ரூபா 680,589 தொகையொன்று கிடைக்கப்பட்டிருந்தது. அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 53 ஆகும். பில் போடப்பட்ட தொகையில் இருந்து ரூபா 691,105 அறவிடப்பட்டிருந்தது. அத்துடன் அவற்றின் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 53 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------

3.1.1 வீதி விளக்குகள் பராமரிப்பு

------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்கு உபகரணம் கொள்வனவு செய்தல் பராமரிப்பாளர் சம்பளம் மற்றும் படிகள் ஆக ரூபா 947,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டிருந்த மின் உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல் விடயங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்பு விடயங்களுக்காக செலவிடப்பட்ட தொகையினை மின்சார சபையில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 மற்றும் இலக்கம் பீஈ/01/01 சுற்று நிருபத்தின் பந்தி 1.4 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் வீதி விளக்குக் பராமரிப்பு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்தும் போது வீதி விளக்குகளில் மின்சார நுகர்வு குறிப்பிட்ட பிரதேசத்தில் இல்லங்கள் மற்றும் மேலதிக சில்லறை நுகர்வுகளின் நூற்றிற்கு 3 இற்கான வரையறுக்கப்பட வேண்டும். எனினும் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.2 செயற்படாத வளங்கள்

----------------------------------

சபையினால் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது ஈரியத்தொட்ட பல்வகைத் தொழிற்பாடுகளுக்கான கட்டிட நிர்மாண வேலை மற்றும் வெல்ஹேன்கொட நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 1,893,293 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஈரியதொட்ட பல்வகைத் தொழிற்பாடுகளுக்கான கட்டிட நிர்மாண வேலைக்காக ரூபா 977,589 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 943,454 ஆகும். இந்த நிர்மாண வேலையினால் பயன்பெறுவோர் 302 பேருக்கு உதவும் என குறிப்பிட்ட வேலை பிரேரணையினை சமர்ப்பிக்கும் போது குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2014 ஆண்டின் செப்டம்பர் மாதம் வரை இக் கட்டிடம் பொது மக்களின் நலனுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெல்ஹேன்கொட நீர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,044,184 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் மூலம் 2014 செப்டம்பர் மாதம் வரை நீர் விநியோக விடயங்க் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தர | 01 | 01 | - | - |
| இரண்டாம் தர | 22 | 20 | 02 | - |
| ஆரம்ப | 42 | 40 | 02 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 19 | - | 19 |
| | 65 | 80 | 04 | 19 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் ஆக ரூபா 11,079,200 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 18,538,150 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 7,458,950 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்கு விடயத் தன்மை மற்றும் நல்லாட்சி

----------------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

------------------------------

சபையில் முறையான அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடத்தியிருக்கவில்லை.

4.3 கொள்வனவுத் திட்டம்

----------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக 2006 ஜனவரி 25 திகதிய இலக்கம் ஜீ.பிர.நி/பி.நி/18 கொண்ட சுற்று நிருபத்தில் 42(ஆ) வின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிருவாகம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு